# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு மே மாதம் 21 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 21.05.2018 | 1) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “ சீர்மிகு நகரம் “ (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “ சீர்மிகு நகரம் “ (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MALL) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்திரவிட்டுள்ளது.<br><br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 02.05 நாள் 27.03.2018இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 90) பதிவு செய்யப்பட்டது. |
| **வ.எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)** |
| 1, | நெடுஞ்சாலைப் பகுதியில் சாலையின் மத்தியப்பகுதியில் எட்டயபுரம் ரோடு மாநகராட்சி எல்லைப்பகுதி முதல் புதிய பேருந்து நிலையம் பாலம் அமைந்துள்ள பகுதி வரை புதிய தெருவிளக்கு மின்கம்பங்களுடன் 135 வாட்ஸ் திறன் கொண்ட மின் ஆற்றல் சேமிப்பு விளக்குகள் பொருந்தும் பணி. | 100.00 |
| 2 | விவிடி சிக்னல் பகுதியிலிருந்து 3வது மைல் பாலம் அமைந்துள்ள பகுதி வரை உள்ள நெடுஞ்சாலைப் பகுதியில் சாலையின் மத்தியப் பகுதியில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்களுடன் 120 வாட்ஸ் திறன் கொண்ட மின் ஆற்றல் சேமிப்பு விளக்குகள் பொருத்தும் பணி | 75.00 |
| | மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை எண். 9128/2018/HSDP-3 நாள் 18.05.2018ல் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப் பட்டுள்ளது. | |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற செயல்முறை ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/3209/2015/W | |
| | 2) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தூத்துக்குடி மாநகராட்சி தொடர்புடைய வழக்குகள் திரு. ஷாஜிபினோ வழக்குறைஞர் என்பவரால் வழக்காடப்பட்டு வருகிறது. இவருக்கு வழக்கு ஒன்றிற்கு ரூ. 7,000/– என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இதே வழக்கறிஞர் கட்டணத்தினை இவருக்கு தொடர்ந்து வழங்கிடவும், வழக்கின் ஆரம்ப நிலையிலான கட்டணங்களை ஏற்க ஏதுவாக ரூ. 7,000/–ல் 50 சதவீதம் தொகையினை ஆரம்ப நிலையில் வழங்கிடவும், வழக்கின் தீர்ப்புரை பெறப்பட்ட பின்னர் மீதம் 50 சதவீதம் கட்டணத்தொகையினை வழங்கிட ஏதுவாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>தவிர தூத்துக்குடி மாநகராட்சிக்கு தொடர்புடைய உள்ளூர் வழக்குகளை திரு. கோமதி மணிகண்டன் என்பவரால் வழக்காடப்பட்டு வருகிறது. எனினும் இவ்வழக்குகள் ஒரே மாதிரியான வழக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்படாமல் இவரால் கோரப்படும் கடிதங்களில் அடிப்படையில் வழக்கு கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே உள்ளூர் வழக்குகள் பொருத்தமட்டில் இவருக்கு வழக்கு ஒன்றிற்கு ரூ. 4500/– என நிர்ணயம் செய்தும் இதன்படி ஆரம்ப நிலையிலான வழக்கு தொடர்பான செலவினங்களை ஏற்க ஏதுவாக மேற்படி தொகையில் 50 சதவீதம் வழங்கவும் ஒவ்வொரு வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்ட பின்னர் மீதம் 50சதவீதம் வழக்கு கட்டணம் வழங்கிடவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. தவிர மேற்படி திரு. கோமதி மணிகண்டன் என்பவரை 01.06.2012 முதல் 5 வருடத்திற்கு பணியமர்த்தி ஆணையிடப்பட்ட காலமானது 31.05.2017 உடன் நிறைவு பெற்றுள்ளதனை அடுத்து இவரது பணி காலத்தினை 01.06.2017 முதல் 31.05.2018 முடிய ஓராண்டுக்கு நீட்டிப்பு செய்து வரன்முறைப்படுத்திடவும் மாமன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். 3703.2017/C5 | 91) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட ஜார்ஜ்ரோடு புல் தோட்டம் பகுதியில் உள்ள பூங்கா இடம் மிகவும் பள்ளமான இடமாக இருந்து வருவதால் மழைக்காலத்தில் பெய்யும் மழைநீர் வெளியில் செல்ல இயலாமல் தேங்கி மேற்படி பகுதி சுற்றியுள்ள வார்டு பொது மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் | 92) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | சூழல் உள்ளது. மேலும் மேற்படி பூங்காவினை பொது மக்கள் பயன்படுத்த தேவையான பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகிறது. எனவே மேற்கண்ட வார்டு பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட ஜார்ஜ் ரோடு புல்தோட்டம் பூங்காவில் சரள் கொண்டு நிரப்பும் பணியினை ரூ 23.00 லட்சம் மதிப்பீட்டில், 2018–19ம் ஆண்டு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/1475/2018–1** | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **21.05.2018**